DEPOSITION OF WITNESS

In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

CC. No. 3 of 2021

Prosecution witness : LW -1 / PW - 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சங்கர்தாஸ் | Caste | | |
| FathersName | | அப்பாசாமி | calling | | |
| Village | | வெங்கல் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 47 |

( Accused called present.)

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.03.2024

முதல் விசாரணை தொடர்ச்சி நேரம் 12.50

1. சாட்சி தன்னிடம் பணம் பறித்த மற்றொரு நபர் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளரா என்ற கேட்டதற்கு ஆஜர் எதிரி இருவரையும் அடையாளம் காட்டினார்.

2. இது சம்பந்தமான போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை :

3. இந்த வழக்கில் புகார் எப்போது கொடுக்கப்பட்டது என்றால் கடந்த 2020 வருடம் 10வதுமாதத்தில் கொடுக்கப்பட்டது. தேதி ஞாபகம் உள்ளதா என்றால் 7ம் தேதி என்று கூறினார்.

4. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நாள் 06.10.2020ம்தேதியன்று நடைபெற்றது. நேரம் தெரியுமா என்றால் மதியம் 1.45 மணி இருக்கும்.

5. புகார் எத்தனை மணியளவில் கொடுக்கப்பட்டது என்றால் காலை 11மணிக்கு கொடுத்தேன்.

6. புகார் அளிப்பதற்கு ஏன் காலதமாக கொடுத்தீர்கள் என்று புகாரிலோ அல்லது போலிசார் விசாரணையிலோ சொல்லியுள்ளீர்களா என்றால் நான் அன்று மாலையோ நான் காவல் நிலையம் சென்றேன் ஆனால் போலீசார் தான் அடுத்த நாள் காலை வரசொல்லி சொன்னார்கள். மேற்கூறிய விவரத்தினை புகாரிலோ அல்லது போலிசார் விசாரணையிலோ சொல்லியுள்ளீர்களா என்றால்இல்லை.

7. நான் GT products நிறுவனத்தின் மேலாளர் என்பதற்கான ஆவணம் ஏதேனும் போலீசாரிடம் ஒப்படைத்தீர்களா என்றால் இல்லை.

8. சம்வம் நடைபெற்ற நேரத்தில் மேற்படி பணியில் இருந்தேன் என்பதற்கான

வருகைபதிவேட்டினை போலீசாரிடம் கொடுத்தீர்களா என்றால் இல்லை.

9. தனது முதல் விசாரணையில் வெள்ளை நிற லாரி ஒன்று நின்று கொண்டிருந்ததாக சொல்லியிருந்தேன் என்றால் சரிதான். அந்த எங்கள் நிறுவனத்திற்கு சொந்தமான லாரி என்றாலும் சரிதான்.

10. அந்த லாரி எங்களது நிறுவனத்தின் நுழைவுவாயில் முன்பு நின்று கொண்டிருந்ததா என்றால் சரிதான்.

11. நிறுவனத்தின் முன்பாக CCTV கேம்ரா பொருத்தப்பட்டுள்ளதா என்றால் சரிதான்.

12. அந்த CCTV உள்ள ஒளிப்பதிவினை போலீசார் விசாரணையின் போது கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை.

13. சம்பவம் நடைபெற்ற போது யார் யார் இருந்தார்கள் எத்தனை நபர்கள் இருந்தார்களஅவர்கள் விவரம் பெயர் பற்றிய விவரம் புகாரிலும், போலீசார் விசாரணையின் போது கூறியுள்ளீர்களா என்றால் இல்லை.

14. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நாள் 06.10.2020ம்தேதியன்று நடைபெற்றது என்று எவ்வளவு மணி நேரம் நடைபெற்றது என்று போலீசார் விசாரணையில் கூறியுள்ளீர்களா என்றால் இல்லை.

15. புகாரிலோ அல்லது போலிசார் விசாரணையிலோ எதிரிகள் தன்னை கத்தியை காட்டி மிரட்டினார்கள் என்ற விவரத்தினை கூறியுள்ளீர்களா என்றால் இல்லை.

16. கத்தி எந்த வகையினை சேர்ந்தது என்று புகாரிலோ அல்லது போலிசார் விசாரணையிலோ என்றால் சொல்லவில்லை.

17. புகாரிலோ அல்லது போலிசார் விசாரணையிலோ எதிரிகளில் யார் யார் தங்களின் உடலில் எங்கு தாக்கினார்கள் என்று கூறியுள்ளீர்களா என்றால் இல்லை.

18. காயம் ஏதும் ஆகவில்லை அதனால் மருத்துவமனை சொல்லவில்லை.

19. புகாரிலோ அல்லது போலிசார் விசாரணையிலோ என்னிடமிருந்து பணம்3000 பறித்து கொண்டு சென்று விட்டார்கள் என்றால் சரிதான்.

20. அந்த 3000 பணத்தினை இரு எதிரிகளில் யார் பணத்தினை எடுத்தார்கள் என்றால் குறிபிட்டு சொல்லிவில்லை.

21. 3000பணத்தில் எந்த மாறியான பணத்தாள் வைத்திருந்தேன் என்று புகாரிலோ அல்லது போலிசார் விசாரணையிலோ குறிபிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை.

22. தற்போது கூறமுடியுமா என்றால் பணத்தாள்களின் விவரம் எனக்கு ஞாபகம் இல்லை.

23. எங்கள் நிறுவத்திற்கு எதிராக ஒரு டீக்கடை, வீடு , கார் டிராவல்ஸ் உள்ளன

என்றால் சரிதான்.

24. எங்கள் நிறுவத்திலிருந்து அமிர்தா கல்லூரி எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 50 அடி இருக்கும்.

25. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் எப்போதும் வாகனப்போக்குவரத்தும், மக்கள் நடமாட்டம் நிறைந்த இடம் என்றால் சரிதான்.

26. எதிரிகள் வந்த ஆட்டோவில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் இரண்டு நபர்கள் இருந்தார்கள்.

27. எதிரிகள் பணத்தினை பறித்து சென்றவுடன் அவர்கள் ஆட்டோவில் சென்றுவிட்டதால் நான் போலீசாரிடம் புகார் கொடுத்துவிடாலம் என்று விட்டுவிட்டேன்.

28. நானே மற்ற நபர்களோ ஆட்டோவை தூரத்தி போக வில்லை என்றால் சரிதான்.

29. எதிரிகள் குறித்த விவரம் மற்றும் அங்க அடையாங்களை புகாரிலோ அல்லது போலிசார் விசாரணையிலோ குறிபிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை.

30. இவ்வழக்கின் முதலாம் எதிரி எனது கிராமத்தை சார்ந்தவர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இரண்டாம் எதிரி வழக்கமாக ஆட்டோ ஓட்டும் நபர் என்பதால் அவரை எனக்கு தெரியாது.

31. இவ்வழக்கிற்கு முன்பாகவே எதிரிகளை எனக்கு தெரிந்திருந்தும் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

32. எங்கள் நிறுவத்திற்கு சொந்தமான லாரி சாலையின் குறுக்கே பழுதாகி நின்றதால் ஏண் வாகனத்தினை குறுக்கே நிறுத்தினீர்கள் என்று எதிரி கேட்டபோது நான் குறுக்கே நிறுத்தவில்லை.வாகனம் சாலையின் குறுக்கே நின்றதற்காக எதிரிக்கும் தங்கள் நிறுவத்தின் நபருக்கும் வாய் தகராறு ஏற்பட்டதால் இந்த பொய்யாக புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

33. உண்மையாகவே எதிரி எங்களிடம் பணம் பறித்து இருந்தால் காவல்நிலையத்தில் புகார் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல.

34. எதிரிகளை முன்பாக தெரிந்திருந்ததால் தான் நீதிமன்ற அணிவகுப்பின்போதும் தற்போதும் எதிரிகளை அடையாளம் காட்டவில்லை என்றால் சரியல்ல.

35. எதிரி மீது கொண்டுள்ள முன்விரோதம் காரணமாக எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

விசாரணை முடிவுற்ற நேரம் 1.30

DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

CC. No. 3 of 2021
Prosecution witness : LW -2 / PW - 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முருகேசன் | Caste | | |
| FathersName | | வரதன் | calling | | |
| Village | | எர்ணாகுப்பம் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 53 |

( Accused called present.)

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.03.2024

முதல் விசாரணை நேரம் 3.15

1. நான் BSC இளங்கலை பட்டம் படித்துள்ளேன்.தனியார் கல்லூரியில் பணி செய்துவருகின்றேன்.

2. அசா1 ஐ எனக்கு தெரியும்.

3. கடந்த 06.10.2020ம் தேதி மதியம் 1.20முதல் 1.30 மணி வரை அமிர்தா கல்லூரிக்கு அருகே சத்தம் கேட்டது நான் வந்து பார்த்தபோது அங்கு நின்ற லாரி டிரைவரிடம் பணமும் செல்போனையும் யாரே பறித்து சென்றுவிட்டதாக தகவல் சொன்னார்கள்.

4. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

5. போலீசார் எங்கு எத்தனை மணிக்கு விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவம் நடைபெற்ற மறுநாள் மதியம் எனது கல்லூரி வைத்து விசாரணை செய்தார்கள்.

6. சம்பவம் நடைபெற்ற போது கல்லூரியில் பணியில் இருந்ததற்கான வருகைபதிவேடு போலீசார் விசாரணையின் போது கொடுத்தீர்களா என்றால் இல்லை.

7. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் நேரத்தில் நான் கல்லூரியின் உள்ளே இருந்தேன்.

8. சம்பவம் குறித்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

9. எனது கல்லூரிக்கு அடுத்து ALM கல்லூரி உள்ளது என்றாலும், அதனை அடுத்து நான்கு வீடுகளும், அதை அடுதது தான் RCK நகர் உள்ளது என்றால் சரிதான்.

10. GT products நிறுவனத்திற்கும், சித்தையா ஹோட்டல்க்கும் உள்ள தூரம் 200அடி இருக்கும்.

11. GT products நிறுவனத்திம் என்பதாலும், அதன் மோனேஜர் எனக்கு நன்கு அறிமுகம் ஆனவர் என்பதாலும் அவருக்கும் பவ்வியப்பட்டு இந்த வழக்கை உறுதியுற்ற பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

விசாரணை முடிவுற்ற நேரம் 3.30